செ.வெ.எண்:13 நாள்: 05.10.2020

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறிவழி காட்டல் மையத்தில் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற்றுவரும் பயனாளிகள் (ஆண்டுக்கு ஒரு முறை) ஒவ்வொரு நிதியாண்டின் துவக்கத்திலும் தாங்கள் ‘‘பணியில் இல்லை’’ என்பதற்கான சுய உறுதிமொழி ஆவணம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தற்போது கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக 30.06.2020 மற்றும் 30.09.2020 ஆகிய காலாண்டுகளுக்கான சுய உறுதிமொழி ஆவணம் சமர்ப்பிக்கத் தவறியவர்கள், தற்போது அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணையின்படி வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற்று வரும் பயனாளிகள் தாங்கள் பணியில் இல்லை என்பதற்கான சுய உறுதிமொழி ஆவணத்துடன் வேலைவாய்ப்பு அடையாள அட்டை நகல், வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டம் தொடர்பான ஒதுக்கீட்டு ஆணை, ஆதார் அட்டை, குடும்ப அடையாள அட்டை மற்றும் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் ஆகியவற்றினை இணைத்து அஞ்சல் வழியாக **31.12.2020க்குள்** அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறிவழி காட்டல் மையத்திற்கு அனுப்பிவைக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**